செ.வெ.எண்: 26 நாள்:20.01.2020

## தலைக்கவசம் உயிர்க்கவசம் என்பதை வாகன ஓட்டிகள் அனைவரும் உணரவேண்டும் - விழிப்புணர்வு வாகனப்பயணத்தை துவக்கி வைத்த மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன் அவர்கள் தகவல்

31-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டுவதின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் வலியுறுத்தும் விதமாக மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இன்று (20.01.2020) நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன் அவர்கள் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்து இருவரும் தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனத்தை ஓட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

விபத்தில்லா பயணத்தை மேற்கொள்ளவும், சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஆண்டுதோறும் நடைபெறும் சாலை பாதுகாப்பு வார விழா இன்று(20.01.2020) தொடங்கப்பட்டு ஒருவார காலம் கடைபிடிக்கப்படவுள்ளது.

சாலை பாதுகாப்பு வாரத்தின் முதல் நாளான இன்று மகளிர் கலந்துகொண்ட, தலைக்கவசம் அணிவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான இருசக்கர வாகன பேரணி மற்றும் முக்கிய பகுதிகளில் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்குதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இரண்டாம் நாளான நாளை (21.01.2020) பிரேம்மஹால் முதல் பேருந்து நிலையம் வரை விழிப்புணர்வு நடை பேரணி நடத்தப்படவுள்ளது.

மூன்றாம் நாள் (22.01.2020) அட்லஸ் கலையரங்கத்தில் பள்ளி, கல்லூரி, ஆட்டோ, டாக்சி மற்றும் போக்குவரத்து கழக ஓட்டுநர்களுக்கு மருத்துவ மற்றும் கண் பரிசோனை முகாமினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்படவுள்ளது. நான்காம் நாளான (23.01.2020) அன்று பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான ஓவியம், பேச்சு, வாசகம் எழுதும் போட்டிகள் மற்றும் பட்டிமன்றம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும், ஐந்தாம் நாளான (24.01.2020) தளவாபாளையம் குமாரசாமி பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு சாலை பாதுகாப்பு விதி மீறல் குறித்த உரை வழங்குதல் உள்ளிட்ட நிகழச்சிகளும், ஆறாம் நாளான (25.01.2020) அன்று ஆண்டிப்பட்டிகோட்டை சுங்கச்சாடியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்குதல் பிரதிபலிப்பான் ஒட்டுதல் போன்ற நிகழச்சிகளும், ஏழாம் நாளான (27.01.2020) அன்று திருவள்ளுவர் திடல் முதல் கரூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி வரை வாகன ஊர்வலம் நடத்துல் மற்றும் 108 ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு விபத்து முதலுதவி குறித்த செயல் விளக்க நிகழ்ச்சி என 7 நாட்களுக்கு தொடர்ந்து சாலை பாதுகாப்பு வார விழா விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

வட்டாரப்போக்குவரத்துத் துறையினர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விழிப்புணர்வு நிகழ்ச்சியாக நடத்தவுள்ளனர். இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து துவங்கிய இருசக்கர பேரணி நகரின் முக்கிய வீதி வழியாக சென்று கரூர் பேருந்து நிலையத்தில் முடிவுற்றது. இந்நிகழ்வில் பேசிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் பெருமுயற்சியால் போக்குவரத்துத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய முயற்சிகளாலும், செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களாலும் தேசிய அளவில் முதல் பரிசிற்கான விருதினை மத்திய அரசு வழங்கி பெருமைபடுத்தியுள்ளது. மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக கரூர் மாவட்ட மக்கள் தலைக்கவசம் உயிர்க்கவசம் என்பதை அனைவருக்கும் அனைவரும் எடுத்துரைக்க வேண்டும் என்றும், சாலை விதிகளை கடைபிடித்து வாகனங்களை ஓட்ட வேண்டும்

இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழகத்தின் சார்பாக சாலைபாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் கண்காட்சி பேருந்தை மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட காவல் கண்கானிப்பாளர் ஆகியோர் பார்வையிட்டார். இந்நிகழச்சியில் 300-க்கும் மேற்பட்ட மகளிர்கள் இந்த விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டு தலைக்கவசம் அணிந்து வாகங்களை ஓட்டினர்.

இந்நிகழ்ச்சியில், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பி.ஆனந்த், தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழக பொதுமேலாளர் திரு.குணசேகரன், கரூர் வருவாய் கோட்டாச்சியர் திருமதி.சந்தியா, மகளிர் திட்ட இயக்குநர் திரு.சுப்பிரமணியன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.தனசேகரன் (கரூர்) திரு.இரவிச்சந்திரன் (அரவக்குறிச்சி) திருமதி. மீனாட்சி (மண்மங்கலம்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.**